அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல - 3/2004

எனது இல-த/7/5/1/100
அரசாங்க நிர்வாக
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 7
2004 ஜ லை மாதம் 18 ஆந் திகதி

சகல அமைச்சுக்களின்
செயலாளர்களுக்கும் திணைக்களத்
தலைவர்களுக்கும்,

பிரசவ விடுமுறை - தாபன விதிக்கோவையின் அத்தியாயம் **XII**

பெண் அரச அலுவலர்களுக்கு ஒவ்வொரு பிள்ளை பிறப்புக்குமாக 84 நாட்கள் பிரசவ விடுமுறை வழங்க அரசு தீர்மானித்துள்ளது. ஆகையால் தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 18 ஆம் பிரிவுக்குப் பதிலாக பின்வரும் பிரிவு 2004.06.23 திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வண்ணம் பதிலீடு செய்யப்படுகிறது.

18. பிரசவ விடுமுறை

18.1 நிரந்தர, தற்காலிக அமய அல்லது பயிலுநர் பெண் அரச அலுவலர்கள் இப்பிரிவின் கீழ் பிரசவ விடுமுறைக்கு உரித்துடையவர்கள் ஆவர்.

18.2 பெண் அரச அலுவலரொருவர் உயிருள்ள ஒவ்வொரு பிள்ளை பிறப்புக்கும் முழுச் சம்பளத்துடனான அரச வேலையாற்று 84 நாட்கள் விடுமுறைக்கு உரித்துடையவராவார். பிரசவம் நடந்து 04 வாரங்கள் செல்ல முன் அலுவலருக்கு மீண்டும் கடமையை பொறுப்பேற்க இடமளிக்கப்பட மாட்டாது. இப் பிரிவின் கீழ் விடுமுறை பெறுவதற்காக ஒரு வைத்தியச் சான்றிதழையோ அல்லது குழந்தையின் பிறப்புச் சான்றிதழையோ சமர்ப்பிக்க வேண்டும்.

18.3 பிரசவ விடுமுறைகளை கணிக்கும் போது அக்காலத்திற்குள் வருகின்ற அரசாங்க விடுமுறைகள் மற்றும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தினங்களை அதில் உள்ளடக்கக் கூடாது.

18.4 இவ் விடுமுறை காலத்தை அலுவலரின் எஞ்சியிருக்கும் விடுமுறைகளிருந்து கழிக்கக் கூடாது என்பதுடன் இவ் விடுமுறை காலத்தை முழுச் சம்பளத்துடனான ஒரு விசேட விடுமுறையாக கருத வேண்டும்.

18.5 பிறக்கும் போதே மரணம் நிகழ்கின்ற ஒரு பிள்ளை பிறப்பிலும் பிரசவத்திலிருந்து 6 வாரங்கள் செல்ல முன் குழந்தை மரணிக்கின்ற சந்தர்ப்பத்திலும் குழந்தையின் மரணச் சான்றிதழை அல்லது வைத்தியச் சான்றிதழை சமர்ப்பிக்குமிடத்து விசேட சம்பளத்துடனான விடுமுறையாக பிள்ளை பிறப்பு நிகழ்ந்த திகதி முதல் 6 வாரகால விடுமுறை வழங்க வேண்டும்.

18.6 கருச்சிதைவுக்காக (Abortion & miscarriage) விடுமுறை அவசியப்படுமாயின் வைத்தியச் சான்றிதழின் பேரில் அலுவலருக்கு உரித்தான ஓய்வு விடுமுறைகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

18.7 அங்கிகரிக்கப்பட்ட 84 நாட்கள் பிரசவ விடுமுறை காலம் முடிவடைந்த பின் தனது குழந்தைக்கு தாய்ப் பாலுட்டுவதற்கு வழமையாக சேவை நிலையத்திலிருந்து புறப்படும் நேரத்திற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன் சேவை நிலையத்தில் இருந்து புறப்படுவதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டும். இவ்வனுமதி வழங்கப்பட வேண்டியது குழந்தையின் வயது 6 (ஆறு) மாதங்கள் பூர்த்தியாகும் வரை மட்டுமாகும்.

மேலும் பெண் அரச அலுவலரொருசவர் கர்ப்பமுற்றிருக்கும் காலம் 5 மாதங்கள் ஆகும் போது கடமைக்காக அரை மணிகத்தியாலம் தாமதமாக சேவை நிலையத்திற்கு வருகை தரவும், வழமையாக சேவை நிலையத்தில் இருந்து புறப்படும் நேரத்திற்கு அரைமணித்தியாலத்திற்கு முன் புறப்படவும் இடமளிக்கப்படுகிறது. இச்சலுகை வழங்கப்படுவது அலுவலர் பிரசவ விடுமுறை பெறும் வரை மட்டுமாகும்.

(1) 2004.06.23 திகதி தொடக்கம் 1996.06.17 மற்றும் 1997.11.18 ஆந் திகதிய 16/96, மற்றும் 16./96 (1) இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகள் இரத்துச் செய்யப்படுகின்றன.

(2) 1999.07.20 திகதிய 16/99 இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தாபன விதிக்கோவையின் XII அத்தியாயத்தின் 18.8.1 உட்பிரிவும் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

18.8.1.1 சகல பெண் அரச அலுவலர்களும், பெண் பயிலுநர்களும் 18.2 உட்பிரிவின் கீழ் அனுமதிக்கப்பட்ட விடுமுறைகள் முடிவடைந்த பின் இங்கு (அ) மற்றும் (ஆ) வில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் பூர்த்தியகும் சந்தர்ப்பங்களின் போது அவரின் சேவைக்காலத்தினுள்ளான பிள்ளை பிறப்பு ஒன்றுக்கு ஆகக் கூடிய 06 மாத காலத்திற்கு சம்பளமற்ற பிரசவ (விசேட) விடுமுறை பெற்றுக் கொள்ளலாம்.

(அ) பிறப்பிலிருந்தே குழந்தை அசாதாரண நிலையில் இருந்ததென பிரசவ, பெண் நோய் மருத்துவ நிபுணரொருவர் (வி.ஒ.ஜி) சிபாரிசு செய்திருந்தால் அத்தகைய குழந்தைகள் தொடர்பாக பெறப்பட்ட சாதாரண பிரசவ விடுமுறைகள் முடிவுறும் சந்தர்ப்பத்தில் அக் குழந்தை தொடர்ந்தும் அசாதாரண நிலையில் இருக்கிறதென்றும் அதனால் தாய் தொடர்ந்து விசேட கவனத்துடன் குழந்தையை பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்றும் அரச சிறுவர் நோய் மருத்துவ நிபுணர் ஒருவர் சிபாரிசு செய்யும் சந்தர்ப்பத்தில்,

(ஆ) குழந்தை பிறப்பினால் வேறுவிதமான நோய்கள் ஏற்பட்ட காரணமாக தாய் மேலும் ஓய்வில் இருக்க வேண்டுமென்று பிரசவ பெண் நோய் மருத்துவ நிபுணர் ஒருவர் (வி.ஒ.ஜி) சிபாரிசு செய்யும் சந்தர்ப்பத்தில்,

ஒப்பம் / எஸ்.சீ. மான்னப்பெரும,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.